(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணைப் பகுதியில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்று சொன்னாலும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றால், கேட்க வேண்டாம். உட்காருங்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *ஒரு முக்கியமான விஷயம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதி இல்லை. உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 431, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

431—

புறவழிச் சாலை

***18918—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—தேனி நெடுஞ்சாலையில் உசிலம்பட்டி நகரத்தில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை — TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை—தேனி நெடுஞ்சாலையில் உசிலம்பட்டி நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கும் பணி மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டபின், நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும், கிராமத்திற்கே சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென 'அம்மா' திட்டத்தைத் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை—தேனி நெடுஞ்சாலையில், உசிலம்பட்டி நகரத்திற்குப் புறவழிச் சாலை வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்தபோது, மக்களைப் பற்றியே கவலைப்படாத, மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கின்ற காங்கிரஸ் அரசாங்கம், இதற்கான ஒப்புதல் வழங்காமல் காலந்தாழ்த்திக் கொண்டிருக்கின்ற வேளையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், அதை விரைந்து முடித்து, உசிலம்பட்டிக்கு ஒரு புறவழிச் சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை—தேனி நெடுஞ்சாலையில், உசிலம்பட்டி நகரத்தில் புறவழிச் சாலை அமைப்பதற்காக மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, நேர்ப்பாட்டின்படி ரூ.14.48 கோடி செலவில் நிலம் கையகப்படுத்த ஒப்புதல் பெறுவதற்கு, மைய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறைக்கு 28—2—2012 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், மத்திய அரசு, வளர்ந்துவரும்*

2013 மே 8]

உசிலம்பட்டி நகரத்தின் தற்போதைய நிலைமைக்கு ஏற்றவாறு திருத்திய தள நேர்ப்பாட்டினை மீண்டும் தயாரிக்குமாறு கேட்டுக் கொண்டதன் காரணமாக, அதற்கான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய மதிப்பீடு தயாரிப்பதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ததற்கு, மதுரை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் தொகுதி, திருமங்கலம்—செங்கோட்டை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல், இந்தியாவினுடைய முன்னாள் துணைப் பிரதமர் திரு. எல்.கே. அத்வானி அவர்கள் கேரளாவுக்குப் பயணம் செல்கின்றபோது, திருமங்கலத்தை அடுத்த ஆலம்பட்டியிலுள்ள ஓடுபாலத்தில் பைப் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழகக் காவல் துறை விரைந்து செயலாற்றி, அந்த பைப் வெடிகுண்டை அகற்றி, முன்னாள் துணைப் பிரதமர் திரு. எல்.கே. அத்வானி அவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளித்து, தமிழகத்திலிருந்து பத்திரமாக அனுப்பிவிட்டார்கள். அந்தப் பாலம் மிகக் குறுகிய ஓடுபாலமாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் என்.எச்.208—ல் கி.மீ. 227/10—ல் ஆலம்பட்டி கிராமத்தில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக ஒப்பந்தப்புள்ளி 8—8—2012—ல் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்களில் குறைவான

ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர், ஒப்பந்தப்புள்ளி விலையைவிட கூடுதல் தொகை கேட்டுள்ளதால், மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி தொடங்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மூலக்கரைப்பட்டி பேரூராட்சியின் கீழ்ப்பகுதியில் இருக்கின்ற ஒரு வழிப் பாதையைச் சீரமைத்து, வட்டச் சாலையாக மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சியின் கீழ்ப்பகுதியில் வட்டச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்த நகரத்தில் செல்லக்கூடிய வாகனங்களின் செறிவின் அடிப்படையில்தான் வட்டச் சாலை அமைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அதை ஆய்வு செய்து, போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தில் தாழையாத்தம் கடை வீதியில் காணப்படுகின்ற நெரிசலான போக்குவரத்தையும், அதனால் ஏற்படும் விபத்தையும் தவிர்க்கும் வகையில், குடியாத்தம் நகரின் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டயன்ய ஆற்றின் கரைமீது*

2013 மே 8]

மாற்றுச் சாலை அமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் இருப்பதனால், மாற்றுச் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அதனடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எதிர்காலத்திலே பரிசீலிக்கும் எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 432, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

432—

விருந்தினர் மாளிகையைச் சீரமைத்தல்

***6366—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, கடையக்குடியில் "ஹோல்ஸ் ஒர்த்" அணைக்கட்டிலுள்ள விருந்தினர் மாளிகை மற்றும் பூங்காவைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருமயம் தொகுதி, கடையக்குடியில் "ஹோல்ஸ் ஒர்த்" அணைக்கட்டில் தங்கும் விடுதி மற்றும் பூங்காவைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். திருமயம்